செய்தி வெளியீடு எண் : 850 நாள்: 27.05.2022

## செய்தி வெளியீடு

### சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை 28.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு.எம்.வெங்கையா நாயுடு அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை சிறப்பித்து போற்றிடும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் 28.05.2022 அன்று சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு.எம்.வெங்கையா நாயுடு அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து, கலைவாணர் அரங்கில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் விழாப் பேருரையாற்றவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின் அவர்கள் தலைமையுரை ஆற்றவும் உள்ளார்கள்.

அரை நூற்றாண்டு காலத் தமிழ்நாட்டு அரசியலின் மையமாகத் திகழ்ந்தவர், அறுபதாண்டுகால பொதுவாழ்க்கைக்குச் சொந்தமானவர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றியவர். அனல் பறக்கும் தம் வசனங்களால் திரையுலகில் தனித்துவம் பெற்றவர். கதை, கவிதை, புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், நாடகம் என, தான் தொட்ட அனைத்திலும் தனி முத்திரைப் பதித்தவர். அரசியலிலும், ஆட்சியின் ஆளுமையிலும் தன்னிகரற்ற தனிப் பெருந்தலைவராக வலம் வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இந்தியத் திருநாட்டிற்கே பல முன்னோடித் திட்டங்களைத் தந்திட்டவர். "உடன்பிறப்பே" எனும் தன் கரகரப்புக் குரலால், கழகத்தவரைக் கட்டிப்போட்டவர். இந்தியாவில் மட்டுமின்றி, உலகளவில்

இத்தகையத் தனித்தன்மை கொண்ட தலைவர் இருந்திடல் சாத்தியமில்லை என்று சத்தியமாய் உரைக்க வைத்தவர். நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட உத்தமத் தலைவர்களைப் போற்றி திருவுருவச் சிலைகளும், அழகிய மணிமண்டபங்களும் அமைத்திட்டவர், ஏழை எளியோர் ஏற்றம் பெற்றிட எண்ணற்றத் திட்டங்களைத் தந்தவர். எந்நாளும் எளிமையின் வடிவானவர். இளம் வயது தொடங்கி, இறப்பிலும் போராடி வெற்றி கண்டவர். எந்நாளும் இறவாப் புகழுக்குச் சொந்தமானவர்,

பகுத்தறிவுப் பகலவன் குருகுலத்தில் பயின்றவர். பேரறிஞப் பெருந்தகையால், "என்தம்பி" என்று வாஞ்சையோடு அழைக்கப்பட்டவர். இனமானப் பேராசிரியர் அவர்களால், பன்முகத் தன்மை கொண்ட தலைவர் என்றும் பாராட்டப்பட்டவர். உலகத் தமிழர்களின் உள்ளங்களில் எல்லாம் நீக்கமற நிறைந்திருப்பவர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆரம்ப கால வாழ்க்கை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் நாள் முத்துவேலருக்கும், அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். தமது இளம் வயதிலேயே நாடகம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தமையால், பேச்சாற்றலிலும், எழுத்தாற்றலிலும் சிறந்து விளங்கினார். 'மாணவ நேசன்' என்னும் கையெழுத்துப் பத்திரிகையை வெளியிட்டு, இளைஞர்களை ஒன்று திரட்டினார். அதன் தொடர்ச்சியாக, 'அனைத்து மாணவர்கள் கழகம்' என்கிற அமைப்பினை உருவாக்கி, 1942ஆம் ஆண்டு 'முரசொலி' என்னும் துண்டு வெளியீட்டை வெளியிட்டார். 1946 முதல் 1948 வரை முரசொலியை மாத இதழாக நடத்தி வந்தார். 1960ஆம் ஆண்டு முதல் முரசொலியானது தினசரி நாளிதழாக வெளியிடப்பட்டது.

## முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசியல் வாழ்க்கை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நீதிக்கட்சியின் பேச்சாளர் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞப் பெருந்தகை அண்ணா ஆகியோரின் திராவிடச் சிந்தனை கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தன்னை முழுமையாகத் திராவிட இயக்கத்திற்கு அர்ப்பணித்தார். மக்கள் நலன்காத்திட 1957இல் நடைபெற்ற

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.

தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருப்பவர், கலை, எழுத்து, அரசியல், ஆட்சிப் பொறுப்பு உள்ளிட்ட அனைத்திலும் தனித்தன்மையோடு தன் முத்திரையைப் பதித்தவர். 80 ஆண்டுகால பொதுவாழ்க்கைக்கும் போராட்ட வாழ்க்கைக்கும் சொந்தமானவர். அறுபதாண்டுகால சட்டமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் பேரியக்கத்திற்கு 50 ஆண்டுகளாக அசைக்க முடியாத ஜனநாயகத் தலைவராகவும் இருந்தார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றித் தலைவர்கள்**

**பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார்** அவர்களால், 'கலைஞர் அவர்களை அறிவில் சிறந்தவர் என்றும் நிருவாகத்தில் சிறந்தவர் என்றும் பொதுத் தொண்டுக்காக தியாகம் செய்வதில் சிறந்தவர்' என்றும் பாராட்டப் பெற்றவர். **பேரறிஞர் அண்ணா** அவர்களால், 'தண்டவாளத்தில் தலைவைத்து படு' என்று சொன்னாலும், 'அமைச்சர் பதவி ஏற்றுக் கொள்' என்று சொன்னாலும் இரண்டையும் ஒன்றாகக் கருதுபவர் என்தம்பி கருணாநிதி' என்றும், 'என் தம்பி பாளையங்கோட்டை தனிமைச் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டு கிடந்த இடம்தான் புனித பூமி' என்றும் போற்றப்பட்டவர். **இனமானப் பேராசிரியர்** அவர்களால், 'எறும்பு போன்ற சுறுசுறுப்பும் – யானை போன்ற நினைவாற்றலும் – எருது போன்ற ஊக்கமும் – குதிரை போன்ற விரைவுத் திறனும் ஆகியவை நாட்டை ஆள்பவரிடம் நிரம்ப வேண்டும் எனில் இவை யாவற்றிலும் முன்னிற்பவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்று குறிப்பிட்டார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிப் பணி.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1957இல் முதன்முதலாக குளித்தலை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். 1957ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக 13 முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றிப் பெற்று வரலாற்றுச் சாதனைப் படைத்தார். 1969ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவி ஏற்றார். இதன் தொடர்ச்சியாக 1971, 1989, 1996, 2006ஆம் ஆண்டுகளில் ஐந்து முறை

தமிழ்நாட்டின் முதலமைச்சராக பணியாற்றி, தாய்த் தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம், தமிழ்ச் சமுதாய மக்கள் கல்வியிலும், சமூக நீதியிலும், பொருளாதாரத்திலும் மேம்பட பல்வேறு சிறப்பானத் திட்டங்களை செயல்படுத்தித் தமிழகத்தை இந்தியத் திருநாட்டின் முன்னோடி மாநிலமாகத் திகழச்செய்தார் என்றால் அது மிகையில்லை.

## முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட முக்கியத் திட்டங்கள்

இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாக பல்வேறு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். குறிப்பாக, குடிசைமாற்று வாரியம் அமைத்தது, பேருந்துகள் நாட்டுடமை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், மாநிலத் திட்டக்குழு உருவாக்கம், பெண்களுக்கு சொத்துரிமை, வன்னியர் சீர் மரபினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு, மகளிருக்கு அரசு வேலைவாய்ப்பில் 30 விழுக்காடு இட ஒதுக்கீடு, உயர்கல்வித் துறை, நெடுஞ்சாலைத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை புதிதாக உருவாக்கம், உழவர் சந்தை, வரும் முன்காப்போம் திட்டம், நமக்கு நாமே திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்கும் திட்டம், ரூ.7 ஆயிரம் கோடி கூட்டுறவு கடன் அறவே ரத்து, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், ஏழை நடுத்தரக் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம், கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ.6000 நிதியுதவி, பள்ளி மாணவ மாணவியர்களுக்கு சத்துணவில் முட்டை வழங்கும் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம், பெரியார் நினைவு சமத்துவப்புரம் போன்ற திட்டங்கள் இன்றல்ல என்றும் பேசப்படுபவை ஆகும்.

## முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கலைத்துறை வாழ்க்கை.

கலைத்துறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றியுள்ள பணி அளவிடர்க்கரியது. 75க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதியுள்ளதோடு, ஆட்சிப்பணி என்பது இடையில் வருவதும் போவதும் ஆகும். எழுத்துப்பணியான எனது செங்கோல், என்றைக்கும் நிலையானது என்று குறிப்பிட்டு, பல்வேறு நாவல்கள், நாடகங்கள்,

சிறுகதைகள், கவிதைத் தொகுதிகள், உரைநூல்கள், கட்டுரைகள் எழுதி சாதனை படைத்தவர்.

இவற்றில் முக்கியமான உரைநூல்கள் திருக்குறள் உரை, சங்கத்தமிழ், தொல்காப்பிய பூங்கா, இலக்கிய மறுபடைப்புகள், குறளோவியம், சிலப்பதிகாரம், நாடகக் காப்பியம், தாய், பூம்புகார் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தனது வாழ்க்கை வரலாற்றை தமிழக மக்கள் அறியும் வகையில் 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் முரசொலி மற்றும் குங்குமம் இதழ்களில் தொடர் கட்டுரையாக எழுதினார். பின்னர் 'நெஞ்சுக்கு நீதி' ஆறு பாகங்கள் கொண்ட நூலாக வெளியிடப்பட்டது.

**நாடகத் துறையில்** சிறந்த விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அனார்கலி, உதயசூரியன், உன்னைத்தான் தம்பி, இளைஞன் குரல், காகிதப் பூ, சிலப்பதிகாரம், சேரன் செங்குட்டுவன், தூக்குமேடை, நச்சுக் கோப்பை, மணிமகுடம், மகான் பெற்ற மகன், வாழமுடியாதவர்கள் போன்ற அற்புதமான நாடகங்களைப் படைத்தவர் கலைஞர் அவர்கள்.

**வரலாற்றுப் புனைவுகளில்** ரோமாபுரி பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம், பாயும் புலி பண்டாரக வன்னியன், பொன்னர் சங்கர் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க புனைவுகளையும், புதினங்களில் அரும்பு, ரத்தக் கண்ணீர், திராவிட பண்ணை, ஒரே ரத்தம், புதையல், வான்கோழி, சுருளிமலை, வெள்ளிக்கிழமை ஆகிய பல புதினங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படைத்தார்.

**சிறுகதைத் தொகுதிகளில்** ஒரு மரம் பூத்தது, கிழவன் கனவு, நெருப்பு, தாய்மை, நளாயினி, பழக்கூடை, பிள்ளையோ பிள்ளை, முடியாத தொடர்கதை ஆகிய சிறப்பானத் தொகுதிகளை படைத்தார். கவிதைத் தொகுதிகளில் அண்ணா கவியரங்கம், கலைஞரின் கவிதைகள், கவிதையல்ல, கவிதை மழை, காலப்பேழையும் கவிதைச் சாவியும், முத்தாரம், வாழ்வெனும் பாதையில் போன்ற கவிதைத் தொகுதிகளை கலைஞர் அவர்கள் படைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமது பொதுவாழ்வில் பெரியார், அண்ணா வளர்த்த உணர்வைப் போற்றி நின்று, அண்ணா வழியில் அயராது உழைத்து ஆற்றியுள்ள தொண்டுகள் ஏராளம். தமிழ் சமுதாயத்தின் உரிமைகளை நிலைநாட்ட அவர் கண்ட களங்கள் ஏராளம்.

தீண்டாமையின் விளைவாக சமுதாயத்தில் நீடிக்கும் கொடுமைகள் ஒழிக்கப்படவேண்டும் என்றும், சாதிபேத அடிப்படையால் வளரும் சமுதாயக் கேடுகளை களைந்தாக வேண்டும் என்றும், வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பாதிக்கப்படும் நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற வழிவகை செய்ய வேண்டும் என்றும், பெண்ணுரிமையும், அவர்கள் வாழ்க்கை நிலையும் உயரும் சூழலை உருவாக்க வேண்டுமென்றும் அயராது பாடுபட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

வாழும் போது வரலாறாகவும், மறைந்தாலும் தமிழ் மக்களின் மனங்களில் நிறைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைதிறப்பு விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in